**IN THE SPECIAL COURT OF FOREST OFFENCE CASES JUDGE,**

**KANNIYAKUMARI DISTRICT AT NAGERCOIL**

**C.C. No. 23/2025**

**Deposition of P.W. 2**

| | |
|---|---|
| **Name** | : **Thiru.** கிருஷ்ணமூர்த்தி |
| **Father's Name** | : |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |
| **Dated** | : **25.06.2026** |

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

**சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :**

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் திருநெல்வேலி வனக்கோட்டம் ராதாபுரம் வனச்சரகம் வள்ளியூர் பிரிவு வனவராக பணியாற்றி வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போது கன்னியாகுமரி மாவட்ட வன உயிரின சரணாலையம் குலசேகரம் வனச்சரகம் பாலாமூர்பீட் வனக்காப்பாளராக பணிபுரிந்து வந்தேன். இந்த ஆஜர் 1 மற்றும் 2 வழக்கு எதிரிகளை எனக்கு தெரியும். மற்ற எதிரிகளையும் தெரியும். 31.3.2013 அன்று அதிகாலை 3 மணியளவில் பேச்சிபாறை பிரிவு வனவர் திரு.முருகேசன் , வனக்காவலர் முருகன் மற்றும் நான் ஆகிய 3 பேரும் வீரப்புலி அரசு காப்புகாடு காளிகேசம் வனப்பகுதியில் ரோந்து பணி மேற்கொள்ளும்போது காளிகேசம் கீரிப்பாறை ரோட்டில் இருசக்கர வாகனம் 1 வருவதை கண்டு அதை தடுத்து நிறுத்தி சோதனை செய்தபோது 1 சாக்கு

பையில் காட்டு ஆமைகளின் கறிகள் இரண்டு பொதிகளாக பொதியப்பட நிலையிலும் மற்றும் உயிருடன் உடும்பின் பின்னங்காலின் விரல்கள் அருவாளால் வெட்டப்பட்டு பிணைக்கப்பட்டு இருந்தது. இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த 1வது எதிரி பின்னால் அமர்ந்திருந்த 2எதிரி ஸ்டீபன் என்பது தெரிய வந்தது. 2 எதிரிகளிடம் வனவர் முருகேசன் விசாரணை மேற்கொள்ளும் போது இருசக்கர வாகனத்திற்கு பின்னால் நடந்த வந்த 2 நபர்களை பிடித்து விசாரணை செய்யும் போது அவர்கள் 3ஆம் எதிரி மற்றும் 4ஆம் எதிரி என தெரிய வந்தது. அவர்களிடம் விசாரணை செய்யும் போது 5மற்றும் 6வது எதிரிகள் தப்பியோடிவிட்டனர். பிடிப்பட்ட 4 எதிரிகளிடம் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. சம்பவ இடத்தில் என்னால் எச். நமுனா தயார் செய்யப்பட்டது. வனக்குற்ற அறிக்கை என்னால் தயார் செய்யப்பட்டது. படிவம் 95 வனச்சரகரால் தயார் செய்யப்பட்டது. ஸ்தல மகசர் வனவரால் தயார் செய்யப்பட்டது. பிடிப்பட்ட 1முதல் 4எதிரிகளிடம் வனச்சரக அலுவலர் விசாரணை செய்யும் போது வீரப்புலி அரசு காப்பு காட்டில் அத்துமீறி நுழைந்து 2காட்டு ஆமைகளை பிடித்து அதை அரிவாளால் வெட்டி கறிகளாக்கி 2பொதிகளாகயும் உயிருடன் 1உடும்பை பிடித்து அதன் முன்னங்கால்களில் விரல்களை கட்டி பிணைந்த நிலையில் வைத்து இருந்ததை ஒப்புக்கொண்டார்கள். எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலம் படி பிடிப்பொருட்களை கைப்பற்றி எச். நமுனா என்னால் தயார் செய்யப்பட்டது. 1முதல் 4 எதிரிகளிடம் என்னால் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. பிடிப்பட்ட காட்டு ஆமை கறி மற்றும் ஆமை ஓடு ஆகியவற்றை உடற்கூறாய்விற்காக அரசு கால்நடை மருத்துவரிடம் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. மாவட்ட வன அலுவலர் வாய் மொழி உத்தரவின் பேரில் காட்டு ஆமை கறி மாவட்ட வன அலுவலர் வளாகத்தில் புதைக்கப்பட்டது. உடும்பு காளிகேசம் காப்பு காட்டில் விடப்பட்டது. குற்ற எதிரிகளிடம் பிடிப்பட்ட இருசக்கர வாகனம் மற்றும் வெட்டு அருவாள் 1 , டார்ச் லைட் 1 ஆகியவை நீதிமன்றத்தில்

ஒப்படைக்கப்பட்டது. பின்பு என்னை வனச்சரக அலுவலர் வழக்கு தொடர்பான விசாரித்தார். (**எச். நமுனா அ.சா.ஆ 3 ஆகவும், வனக்குற்ற அறிக்கை அ.சா.ஆ. 4 ஆகவும், 1 வது எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.5 ஆகவும், 2 வது எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.6 ஆகவும், 4 வது எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. )**